PRE BOARD EXAM

TAMIL

Class – X

Max. Marks: 80

Date: 04 February, 2020 Time Allowed: 03 Hrs.

பகுதி – அ (படித்தல்)

SECTION –A [READING COMPREHENSION] - [15]

1. பின்வரும் பகுதியைப் படித்துக் கொடுக்கபட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்ற விடை தருக. [5]

இந்திய மல்பெரி பழம் என அறியப்படும் நோனி, தமிழில் நுணா என அழைக்கப்படுகிறது. தமிழகப் பாரம்பரிய மருத்துவத்தில் மட்டுமின்றி உலகின் பல நாடுகளில் மருத்துவத்தில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பசுமை மாறாத் தாவரமான இது வெப்ப மண்டலப் பகுதியில் பரவிக் காணப்படுகிறது. இதன் பழங்களை உணவாகவும் பிற பாகங்களோடு சேர்த்து உண்ணும் மருந்துப் பொருளாகவும் பயன்படுகிறது. 203 வகையான பயன்தரும் உயிர்வேதிப் பொருட்களும் ஆற்றல்மிகு உயிர்கூட்டுப் பொருள்களும் இத்தாவரத்தில் கண்டறியப்பட்டுள்ளன. குறிப்பாக இத்தாவரம் புற்றுநோயைக் குணப்படுத்தும் தன்மையுடையது.

தமிழகம், கேரள மாநிலங்களில் நல்ல மழைப்பொழிவு, மண்வளம் உள்ள இடங்களில் நோனி நன்கு வளரும். நோனி எந்தப் பகுதியில் விளைந்தாலும் வருடம் முழுவதும் புதிய இலைகள், பழங்களை உற்பத்தி செய்வது இதன் சிறப்பம்சம். நோனி உடல் ஹார்மோன்களை சமன்செய்து, பல்வேறு உடற்செயலியல் தொடர்பான உபாதைகளிலிருந்து நிவாரணம் தருகிறது. இம்மருத்துவப் பயன்கள் சித்த மருத்துவத்திலும் நன்கு அறியப்பட்டவை ஆகும். எனவே தான் நோனி எனப்படும் நுணா ஆற்றல்மிகு அதிசயத் தாவரம் என்றழைக்கப்படுகிறது.

வினாக்கள்:

i) நோனி தமிழில் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

அ)நுங்கு ஆ)நுணா

இ)நுனி ஈ)சங்கு

ii) நோனி தாவரத்தில் எத்தனை வகையான பயன்கள் கண்டறியப்பட்டுள்ளன?

அ)200 ஆ)201

இ)202 ஈ)203

| | | | |
|---|---|---|---|
| | | iii) நோனி எந்தப் பகுதியில் பரவிக் காணப்படுகிறது?<br>அ)காற்று மண்டலம் ஆ)வாயு மண்டலம்<br>இ)வெப்ப மண்டலம் ஈ)குளிர் மண்டலம்<br><br>iv) நோனியின் மருத்துவப் பயன்கள் எம்மருத்துவத்திலும் உள்ளன?<br>அ)சித்த மருத்துவம் ஆ)யுனானி<br>இ)ஹோமியோபதி ஈ)அலோபதி<br><br>v) நோனியின் வேர்கள் எந்த நோயைக் குணப்படுத்தும் தன்மையுடையவை?<br>அ)காசநோய் ஆ)புற்றுநோய்<br>இ)இளைப்பு ஈ)அலோபதி | |
| | 2. | பின்வரும் பத்தியைப் படித்துக் கொடுக்கப்பட்டுள்ள பலவுள் தெரிவு வினாக்களுக்கு விடை தருக.<br><br>இன்று உலகில் இருந்தால் மிகப்பெரிய அதிசயமாக இருந்திருக்கக் கூடியது மொகலாய மன்னன் ஷாஜஹான் செய்து வைத்திருந்த அதிசய மயில் ஆசனமாகும். அவன் செய்தபோது அதில் 1100 கிலோ தங்கமும் 250 கிலோ இரத்தினக் கற்களும் இருந்தன. உலகிலேயே மிகப்பெரிய தங்கக் காசும் ஷாஜஹானுடையதே. அதைப் பல ஆண்டுகளுக்குமுன் லண்டனில் ஏலம் விட்டார்கள். ஷாஜஹானுக்குத் தங்கம் என்பது தண்ணீர் பட்டபாடு. கஜினி போன்றோர் கொள்கை அடித்த பின்னரும் நம்மிடம் அவ்வளவு தங்கமும் வைரமும் இருந்தன.<br>ஷாஜஹான் மகனான அவுரங்சீப்புக்குப் பின்னர் மொகலாய சாம்ராஜ்ஜியம் பலவீனம் அடைந்தது. மகமதுஷா டில்லியை ஆண்டபோது பாரசீகத்திலிருந்து (தற்போது ஈரான் என்று பெயர்) நாதர்ஷா படை எடுத்து வந்தான். பெரிய கொடுங்கோலன் டில்லியை சூறையாடி ஒரே இரவில் 30000 பேரைக் கொல்ல உத்தரவிட்டான். மன்னன் மகமதுஷா கொலைக்கு நடுங்கிப்போய் எல்லோரையும் உயிரோடு விட்டால் தன் செல்வம் எதை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம் என்றான். நாதிர்ஷா மயில் ஆசனம், இரத்தின பூமி உருண்டை உள்பட எல்லா செல்வங்களையும் கொள்ளை அடித்துப் பாரசீகத்துக்குத் திரும்பிக்கொண்டிருந்தான். போகும் வழியில் குர்தீஷ் இன மக்கள் நாதிர்ஷாவைப் படுகொலை செய்தனர். அலெக்சாண்டர்போல இவனும் நாடு திரும்பாமல் | [5] |

பிணமானான். மயில் ஆசனத்தை அக்கு ஆணிவேறாகக் கழற்றிப் பங்குபோட்டுக் கொண்டனர். இப்பொழுது டெஹ்ரானில் ஒரு மயில் ஆசனம் உள்ளது. அது உண்மையன்று.

வினாக்கள்:

i) பல ஆண்டுகளுக்குமுன் இதை லண்டனில் ஏலம் விட்டார்கள் :

அ)வைரம் ஆ)தங்கக் காசு

இ)இரத்தின பூமி உருண்டை ஈ)இரத்தினம்

ii) மயிலாசனத்தில் இருந்த இரத்தினக் கற்களின் எடை :

அ)1000 கிலோ ஆ)1100 கிலோ

இ)250 கிலோ ஈ)100 கிலோ

iii) மயில் ஆசனம் செய்து வைத்திருந்த மன்னன் யார்?

அ)ஷாஜஹான் ஆ)அவுரங்கசீப்

இ)நாதிர்ஷா ஈ)மகமதுஷா

iv) நாதிர்ஷாவைக் கொன்றவர் யார்?

அ)அலெக்ஸாண்டர் ஆ)குர்தீஷ் இன மக்கள்

இ)ஷாஜகான் ஈ)அவுரங்கசீப்

v) இந்தியாவின் மயில் ஆசனம் இன்று --------------------- உள்ளது.

அ)டெஹ்ரானில் உள்ளது ஆ)லண்டனில் உள்ளது

இ)எங்கும் இல்லை ஈ)டில்லியில் உள்ளது

3. <u>பின்வரும் பகுதியைப் படித்து அதனை மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி எழுதுக.</u> [5]

தமிழர்கள் பல்வேறு இடங்களிலும் பற்பல தொழில்களை உடையவர்களாயிருந்தாலும் எல்லாரும் ஒரு தாய் வயிற்றில் பிறந்தது போலவே ஒருவருக்குகொருவர் சிறிதும் வேறுபாடில்லாமல் உயர்ந்த அன்பு வாழ்க்கையில் விளங்கியிருந்தனர். எல்லாரும் இந்நாட்டு மக்கள்; எல்லாருக்கும் தமிழ்மொழி உரியது; எல்லா ஊர்களும் ஓர் ஊர் போன்றனவே என்னும் ஒற்றுமை எண்ணம் அவர்களிடம் மேலோங்கியிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| | | 'யாதும் ஊரே யாவருங் கேளிர்' என்பது அவர்களின் தீர்மானமான கொள்கையாகும். எல்லோரும் ஒன்றாக அமர்ந்து உணவு கொள்வார்கள். தமக்குள், கலந்த உறவோடு திருமணம் செய்துகொள்வதும் உண்டு. தமிழ் மக்களெல்லாரும் ஒருவருக்கொருவர் உறவினராகவே இருந்தனர். இதனால் அவர்களுக்கு எல்லாருடைய உதவிகளும் கிடைக்க இடமிருந்தது. நிலையான தொழில் வகைகளாலும் கலையாத உறவின் முறைகளாலும் கவலை சிறிதுமின்றி மனவொற்றுமையாய் அவர்கள் மகிழ்ந்து வாழ்ந்திருந்தமை அவர்களது களங்கமற்ற அழகிய உள்ளத்தை எடுத்துக்காட்டுகின்றது. தம்மோடு பழகியவர்கள் தமக்கு நஞ்சு ஊட்டினும் தம்மவர்கள் என்னுங் கண்ணோட்டத்தால் அதனை மறவாமல் உண்டு, மேலும் அவர்களோடு பழகும் நோக்கமுடையவர்களாக அக்காலப் பெரியோர்கள் வாழந்திருக்கலாம். | |
| | 4. | பகுதி – ஆ (எழுதுதல்)<br>SECTION – B [ WRITING] MARKS - [14]<br>அ) பருவமழை பாதிப்பால் நீராதாரங்களில் நீர் இருப்பு குறைவதால் கிணறுகளைத் தூர் வாரி குடிநீர் வழங்க மாவட்ட ஆட்சியருக்கு விண்ணப்பம் வரைக.<br>(அல்லது)<br>ஆ) உடற்பயிற்சியால் உடலும் கல்வியும் மேம்படும் என்பதை வெளியூரில் வாழும் உன் நண்பனுக்கு மடல் வரைக.<br>(இரண்டிலும் உன் பெயரும் முகவரியும்) க.பூவழகன் / க.பூவழகி, 12, வள்ளலார் தெரு, திருமூலர் காலனி, மாட்டுத்தாவணி, மதுரை – 07. | [6] |
| | 5 | ஏதேனும் ஒரு பகுதியிலுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக.<br>அ) வாழ்வை வளமாக்கும் எரி சக்தி – மின்சாரம் தயாரிப்பில் பலவகை முறைகள் - என்றும் கிடைக்கும் சூரிய சக்தி – மக்களுக்கு விழிப்புணர்வு – தொழில் வளர்ச்சி – பொருளாதாரத்தில் அதன் பங்கு – பயன்படுத்துவோம் - பயன் பெறுவோம் - முடிவுரை.<br>ஆ) முன்னுரை – உணவுதரும் தொழில் - உழவர் உலகத்தார்க்கு ஆணி - இந்தியா கிராமங்களில் வாழ்கிறது - இன்றைய நிலை – விளைநிலங்கள் வீடுகளாதல் - செயற்கை உரம் தரும் சீரழிவு – வெள்ளமும் வறட்சியும் - நகரம் நோக்கி நகர்தல் - தீர்வு – முடிவுரை.<br>இ) தேசிய ஒருமைப்பாடு – அடிமை வாழ்வின் அவலம் - விடுதலை வேட்கை – வேற்றுமையில் ஒற்றுமை – ஒருமைப்பாட்டின் அவசியம் - இந்தியாவின் தன்மை | [8] |

– பண்பாட்டுப் பிணைப்பு – ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு – மாணவர் கடமை – முடிவுரை.

பகுதி - இ (இலக்கணம்)

SECTION – C [ GRAMMAR] MARKS - [15]

6. சான்று தருக. (ஏதேனும் மூன்றனுக்கு மட்டும்) [3]

i) இன்னிசையளபெடை :

அ)கொடுப்பதூஉம் ஆ)ஓஒதல் வேண்டும்

இ)உரனசைஇ ஈ)உறாஅர்க்கு உறுநோய்

ii)இருபெயரொட்டுப் பண்புத்தொகை :

அ)வீசுதென்றல் ஆ)தேர்ப்பாகன்

இ)தாய்சேய் ஈ)மார்கழித்திங்கள்

iii)குளிர்காலம் :

அ)ஆவணி, புரட்டாசி ஆ)ஐப்பசி, கார்த்திகை

இ)மாசி, பங்குனி ஈ)சித்திரை, வைகாசி

iv)புளிமாங்காய் :

அ)தாமரைத்திரு ஆ)குளத்தினிலே

இ)செவிச்செல்வம் ஈ)மலர்மிசை

v)திணை வழுவமைதி :

அ)கத்துங் குயிலோசை ஆ)வாடா ராசா! வாடா கண்ணா!

இ)லட்சுமி வந்தாச்சு ஈ)பிரதமர் நாளை தமிழகம் வருகிறார்

7. நிரப்புக. (ஏதேனும் மூன்றனுக்கு மட்டும்) [3]

i)இயல்பாய் நிகழும் நிகழ்ச்சியின்மீது கவிஞர் தன் குறிப்பினை ஏற்றிக் கூறுவது ------------------------------ ஆகும்.

| | | | |
|---|---|---|---|
| | | அ)தற்குறிப்பேற்ற அணி ஆ)தன்மையணி<br>இ)நிரல்நிறையணி ஈ)தீவக அணி<br>ii) முற்றுப்பெறாத வினைச்சொல் வேறொரு வினைமுற்றைக் கொண்டு முடிந்தால் அது ------------------------------ எனப்படும்.<br>அ)பெயரெச்சம் ஆ)வினையெச்சம்<br>இ)வினைமுற்று ஈ)வினையாலணையும் பெயர்<br>iii)கடைக்குச் செல்வாயா? என்ற வினவியபோது 'நீயே செல்' என்று கூறுவது -------------------------------- ஆகும்.<br>அ)நேர்விடை ஆ)மறைவிடை<br>இ)ஏவல் விடை ஈ)உறுவது கூறல் விடை<br>iv)இரு சொற்களுக்கு இடையில் உவம உருபு மறைந்து வருவது ------------------- ஆகும்.<br>அ)வேற்றுமைத்தொகை ஆ)வினைத்தொகை<br>இ)உவமைத்தொகை ஈ)உம்மைத்தொகை<br>v)ஆசிரியப்பா ---------------------------- வகைப்படும்.<br>அ)நான்கு ஆ)ஐந்து<br>இ)ஆறு ஈ)மூன்று | |
| | 8. | <u>கூறியவாறு செய்க.</u> (ஏதேனும் மூன்றனுக்கு மட்டும்)<br>i)இது செய்வாயா? (நேர்விடையாக்குக)<br>அ)செய்வேன் ஆ)செய்யேன்<br>இ)நீயே செய் ஈ)அவன் செய்வான்<br>ii)அமிழ்தமொழி (உருவகமாகும்போது)<br>அ)அமிழ்தமாகிய மொழி ஆ)மொழியமிழ்தம்<br>இ)அமிழ்தமான மொழி ஈ)அமிழ்த மொழியா? | [3] |

iii) கோதை ஆடினாள் (நிகழ்கால பெயரெச்சமாகும்போது)

அ)ஆடிய கோதை ஆ)ஆடுகின்ற கோதை

இ)ஆடும் கோதை ஈ)கோதை ஆடவில்லை

iv)மாணவர்கள் (அசை பிரிக்க)

அ)தேமாங்காய் ஆ)புளிமாங்காய்

இ)கூவிளங்காய் ஈ)கருவிளங்காய்

v)நெய்தல் (உரிய நிலத்தைக் கண்டறிக)

அ)காடும் காடு சார்ந்த இடமும் ஆ)மலையும் மலை சார்ந்த இடமும்

இ)வயலும் வயல் சார்ந்த இடமும் ஈ)கடலும் கடல் சார்ந்த இடமும்

9. <u>இலக்கணக் குறிப்பு தருக</u>. (ஏதேனும் மூன்றனுக்கு மட்டும்) [3]

i)வேங்கை :
அ)தனிமொழி ஆ)தொடர்மொழி
இ)பொதுமொழி ஈ)வினையெச்சம்

ii)அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.
அ)தீவக அணி ஆ)நிரல்நிறையணி
இ)நவிற்சியணி ஈ)உவமையணி

iii)ஒருவர் சொற்பொழிவாற்றுவது போன்ற ஓசை :
அ)செப்பலோசை ஆ)அகவலோசை
இ)துள்ளலோசை ஈ)தூங்கலோசை

iv)கதிரவா படி!
அ)எழுவாய்த் தொடர் ஆ)வினைமுற்றுத்தொடர்
இ)வேற்றுமைத்தொடர் ஈ)விளித்தொடர்

v)நன்மக்கட்<u>*பேறு*</u>
அ)முதனிலைத் தொழிற்பெயர் ஆ)முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்
இ)வினையாலணையும் பெயர் ஈ)வினைத்தொகை

10. <u>சரியான சொற்றொடரைத் தேர்வு செய்க.</u> (மூன்றுக்கு மட்டும்) [3]

i) அ)மருத நிலத்திற்குரிய பறவைகள் - காட்டுக்கோழி, மயில்
ஆ)மருத நிலத்திற்குரிய பறவைகள் - நாரை, அன்னம்
இ)மருத நிலத்திற்குரிய பறவைகள் - கிளி, மயில்
ஈ)மருத நிலத்திற்குரிய பறவைகள் - புறா, பருந்து

ii) அ)காய் முன் நேர் வருவது – நேரொன்றாசிரியத்தளை
ஆ)காய் முன் நேர் வருவது – நிரையொன்றாசிரியத்தளை
இ)காய் முன் நேர் வருவது – இயற்சீர் வெண்டளை
ஈ)காய் முன் நேர் வருவது – வெண்சீர் வெண்டளை

iii) அ)பாடப்படும் ஆண்மகனது ஒழுகலாறு – வெட்சித்திணை
ஆ)பாடப்படும் ஆண்மகனது ஒழுகலாறு – வாகைத்திணை
இ)பாடப்படும் ஆண்மகனது ஒழுகலாறு – பாடாண்திணை
ஈ)பாடப்படும் ஆண்மகனது ஒழுகலாறு – பொதுவியல் திணை

iv) அ)விடை வகைகள் ஆறு வகைப்படும்
ஆ)விடை வகைகள் ஏழு வகைப்படும்
இ)விடை வகைகள் எட்டு வகைப்படும்
ஈ)விடை வகைகள் பத்து வகைப்படும்

v) அ)இசை, குறிப்பு, பண்பு பற்றி வருவது அடுக்குத்தொடர்
ஆ)இசை, குறிப்பு, பண்பு பற்றி வருவது இரட்டைக்கிளவி
இ)இசை, குறிப்பு, பண்பு பற்றி வருவது இனங்குறித்தல்
ஈ)இசை, குறிப்பு, பண்பு பற்றி வருவது வெளிப்படை

## பகுதி - ஈ (இலக்கியம் / தமிழ்ப்பாடநூல்)
## SECTION –D [LITERATURE / TEXT BOOKS] - [36]

11. [5]

பின்வரும் உரைநடைப் பத்தியினைப் படித்துத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு உரிய விடையை எழுதுக.

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் 1906ஆம் ஆண்டு மிகவும் சிறப்புடைய ஆண்டாகக் கருதப்படுகிறது. அந்த ஆண்டில்தான் காந்தியடிகள் சத்தியாகிரகம் என்ற அறப்போர் முறையை தென்னாப்பிரிக்காவில் தொடங்கி வைத்தார். தமிழ்நாட்டைத் தனித்து நோக்கினாலும் வரலாற்றுச் சிறப்புக்குரிய நிகழ்வுகள் பல அவ்வாண்டில் நடைபெற்றது. வ.உ.சிதம்பரனார் ஆங்கிலேயர்களுக்கு எதிராக சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார். இத்தகைய சிறப்புள்ள ஆண்டில் ஜீன் 26ஆம் நாள் சென்னை ஆயிரம் விளக்கு வட்டம் சால்வன் குப்பம் பகுதியில் நான் பிறந்தேன். நான் பிறந்த வட்டத்திற்கு ஆயிரம் விளக்கு எனப் பெயர் இருப்பினும் என்னைப் பெற்றெடுத்த குடும்பம் வறுமை என்னும் இருள் சூழ்ந்ததுதான். என் தந்தையார் பெயர் பொன்னுசாமி. அன்னையின் பெயர் சிவகாமி. பெற்றோர் எனக்கு இட்ட பெயர் ஞானப்பிரகாசம். ஆனால், சரபையர் என்ற முதியவர் ஒருவர் என்னுடைய பெயரை மாற்றி சிவஞானி என்றே அழைத்தார். பின்னாளில் எனக்கு இட்டு அழைத்த சிவஞானி என்னும் பெயரே சிறிது திருத்தத்துடன் சிவஞானம் என்று நிலைப்பெற்றது.

வினாக்கள்:

i)சத்தியாகிரகம் என்னும் அறப்போர் முறை தொடங்கிய ஆண்டு எது?

ii)ஆங்கிலேயருக்கு எதிராக சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கியவர் யார்?

iii)ம.பொ.சி. பிறந்த சால்வன் குப்பம் எந்த வட்டத்தில் உள்ளது?

iv)சிவஞானி என்று ம.பொ.சி. பெயரை மாற்றி அழைத்தவர் யார்?

v)ம.பொ.சி.யின் குடும்பம் ------------------- என்னும் இருள் சூழ்ந்ததாக இருந்தது.

12. பின்வரும் செய்யுள் பகுதியைப் படித்து அதன் அடியிற் காணும் வினாக்களுக்கு விடையளிக்க. [4]

‘‘ஓங்கு தண் பணைசூழ் நீப வனத்தை நீத்து ஒரு போதேனும்

நீங்குவம் அல்லேம் கண்டாய் ஆயினும் நீயும் வேறு
தீங்கு உளை அல்லை காடன் செய்யுளை இகழ்தலாலே
ஆங்கு அவன் இடத்தில் யாம் வைத்த அருளினால் வந்தேம் என்னா''

<u>வினாக்கள்:</u>

i)இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் :

அ)திருவிளையாடற்புராணம் ஆ)சீறாப்புராணம்

இ)பெரியபுராணம் ஈ)கம்பராமாயணம்

ii)இப்பாடலில் 'நீபவனம்' என்னும் சொல் தரும் பொருள் :

அ)மலை ஆ)கடம்பவனம்

இ)நீண்ட ஆறு ஈ)நீர் சூழ்ந்த வயல்

iii)இப்பாடலைப் பாடியவர் யார்?

அ)பரஞ்சோதி முனிவர் ஆ)திருநாவுக்கரசர்

இ)சேக்கிழார் ஈ)அப்பூதியடிகள்

iv)இப்பாடலில் 'மூங்கில்' என்னும் பொருள் தரும் சொல் --------------- ஆகும்.

அ)வனம் ஆ)பணை

இ)அருள் ஈ)உளை

13. <u>விடுபட்ட குறட்பா சொற்களை நிரப்புக.</u> [2]

i) முயற்சி திருவினை ஆக்கும் ------------------------------
----------------------- புகுத்தி விடும்.

ii) கரப்பிடும்பை ------------------------ காணின் நிரம்பிடும்பை
---------------------- ஒருங்கு கெடும்.

14. <u>பின்வரும் செய்யுள் வினாக்களில் எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க.</u> [8]

i)சிறந்த அமைச்சு மற்றும் பொருள்செயல்வகை குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

ii)அ)பரிபாடல் - குறிப்பு எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| | | ஆ)உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையென பரிபாடல்வழி அறிந்தவற்றை குறிப்பிடுக.<br>iii)தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாக பாவலரேறு கூறுவன யாவை?<br>iv)கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர்தம் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க. | |
| | 15. | <u>பின்வரும் உரைநடை வினாக்களில் எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க</u>.<br><br>i)செயற்கை நுண்ணறிவு பயன்படும் துறைகள் பற்றி எழுதுக.<br>ii)நிகழ்கலைகளுள் காவடியாட்டம், தோற்பாவைக் கூத்து குறித்து விளக்குக.<br>iii)தமிழ்ச்சொல் வளம் குறித்தும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை பற்றியும் எழுதுக.<br>iv)சங்க இலக்கியங்கள் காட்டும் அரசியல் அறம், போர் அறம் குறித்து விளக்குக.<br>v)எதற்காக எழுதுகிறேன்? என்று ஜெயகாந்தன் கூறுவனவற்றை எழுதுக. | [10] |
| | 16. | <u>ஏதேனும் ஒன்று பற்றித் துணைப்பாடக் கட்டுரை எழுதுக</u>.<br>i)புயலிலே ஒரு தோணி<br>ii)விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை<br>iii)ஒருவன் இருக்கிறான் | [7] |